அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 51 - சித்திரக்கலை



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# புள்ளி வழங்கும் திட்டம் - 2018

## I, II, III

## 51 - சித்திரக்கலை

சித்திரக்கலை I

இவ்விடைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி I - 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன் பகுதி II - 06 வினாக்களை கொண்டுள்ளது. பல்தேர்வு வினா கட்டாய வினாவாகவும் பகுதி II அ, ஆ, இ என மூன்று உப பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவை தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். பல்தேர்வு வினாவுக்கு 40 புள்ளிகளும் ஏனைய மூன்று வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் 60 புள்ளிகள் வழங்கப்படும்.

சித்திரக்கலை II

இவ்வினாத்தாளில் ஒரே ஒரு செய்முறை வினா மட்டுமே உள்ளது. சுதந்திரமான இரேகை வரைதலின் மூலம் அசையாப் பொருட்கூட்டத்தைப் பார்த்து வரைதலும் வர்ணம் தீட்டுதலும். இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

சித்திரக்கலை III

இவ்வினாத்தாள் அ,ஆ,இ என மூன்று செய்முறை வினாக்களை கொண்டது.

அ. சித்திர ஒழுங்கிணைப்பு
ஆ. அலங்கார ஆக்கம்
இ. கிரபிக் சித்திர நிர்மானிப்பு

குறிப்பிட்ட மூன்று பகுதிகளில் இருந்து ஒரு பகுதியை தெரிந்து ஒரு வினாவை தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். இவ்வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் மூன்று வினா பத்திரத்திற்கு 300 புள்ளிகள். இதை மூன்றால் வகுப்பதன் $(300/3 = 100)$ மூலம் இறுதிப் புள்ளியை பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப் பத்திரத்திற்கு புள்ளிகள் வழங்கும் போது பகுதி இரண்டிற்கும் வேறுவேறாக புள்ளி வழங்குவதற்கு கவனம் எடுத்தல் வேண்டும். முதலாம் பகுதியான பல்தேர்வு வினா பத்திரத்திற்கு விடை அவ்வினாப்பத்திரத்திலேயே அளிக்கப்பட்டிருக்கும். அப்பத்திரத்திலேயே சரி பிழை இட்டு பெறப்படும் உரிய புள்ளிகளை விடைத்தாளின் மேல் வலப்பக்கத்தில் காணப்படும் கூட்டினுள் பதியவும். மிகுதி வினாக்கள் மூன்றிற்கும் வேறு வேறாக மதிப்பீடு செய்து ஒவ்வொன்றிற்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளை பிழை இன்றி அவ்விடையின் இறுதியில் எழுதி அவற்றை கூட்டி அவ்வினாக்களின் கூட்டுத்தொகையை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் வலப்பக்க மேல்மூலையில் காணப்படும் உரிய கூட்டினுள் இட்டு கூட்டிக் கொள்ளவும்.

ஒவ்வொரு விடைகளுக்கும் கிடைக்கும் புள்ளியை வேறு வேறாக வினா இலக்கத்திற்கு எதிரே முன்பக்கத்திற்கு கொண்டு வந்து இட்டு முழுக் கூட்டுத்தொகையை பிழை இன்றி முதலாவது பத்திரத்திற்கு உரிய கூட்டினுள் இடவும். அவ்வாறே II,III பத்திரங்களுக்கு நியதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளிகளை முதல் பக்கத்தில் உள்ள உரிய கூட்டினுள் பதிக. வினாப்பத்திரம் மூன்றிற்கும் 300 புள்ளிகள் பெறப்படும். அதனை மூன்றால் வகுத்து இறுதிப்புள்ளியை தீர்மானித்தல் வேண்டும். இலக்கங்களை எழுதும்போது விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும்.

புள்ளியிடப்பட்ட ஒவ்வொரு விடைத்தாளும் இன்னுமொரு பரீட்சகரினால் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பரீட்சகரும் தத்தம் குறியீட்டு எண்களை தாம் புள்ளி இட்ட விடைத்தாளிலும் குறித்த இடங்களில் கட்டாயமாக இடவேண்டும்.

புள்ளிப்பட்டியல்களைப் பதியும் போது புள்ளிகளைப் பதியும் பரீட்சகர் தாமே விடைத்தாளை பார்த்து புள்ளிகளைப் பதியவேண்டும். ஒருவர் வாசிக்க ஒருவர் பதியவே கூடாது. பிழைகள் ஏற்படாமல் பொறுமையாக பதிதல் வேண்டும். ஏதேனும் பிழைகள் ஏற்படுமாயின் அதைத் தனிக்கோட்டினால் வெட்டி அருகில் எழுதி கையொப்பம் இட வேண்டும். அழித்தல், சுரண்டுதல், அழிக்கும் மை, பாவித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

சில வேளைகளில் மேலதிகமான வினாக்களுக்கும் விடை அளித்திருக்கக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் விடைத்தாளில் எழுதப்பட்டிருக்கும் சகல விடைகளையும் புள்ளியிட்டு முதற்பக்கத்தில் அப்புள்ளிகளைப் பதிந்து அப்புள்ளிகளில் மிகக் குறைந்த புள்ளியை மட்டும் மேலதிகம் எனக் குறிப்பிட்டு வெட்டி மிகுதிப் புள்ளிகளைக் கூட்டி மொத்தப் புள்ளி காணப்பட வேண்டும்.

விடைத்தாள்களைப் புள்ளியிட சிவப்பு மைப் பேனாவைப் பயன்படுத்துக.

பத்திரம் I

நோக்கம்:-

1. இலங்கை, இந்தியா, ஐரோப்பிய கலை நிர்மானங்களையும் அதன் கலாச்சார பின்னணியையும் பற்றி மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சியை அளவிடல்.
2. பிரசித்தி பெற்ற பல்வேறு கலைஞர்களையும் அவர்களது கலை ஆக்கங்களையும் அறிந்து அவற்றின் பின்னணி, ஊடகப்பயன்பாடு கருப்பொருள் நுட்பமுறைகளையும் உணர்வு வெளிப்பாட்டையும், நயத்தல் திறனையும் அளவிடல்.
3. கற்ற விடயங்களை சரியாகவும், தர்க்கரீதியாகவும் முன்வைக்கும் திறனை அளவிடல்.

பத்திரம் II

அசையாப் பொருட்கூட்டம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும்

நோக்கம்:-

1. இயற்கைச் செயற்கைப் பொருட்களின் இயல்பையும், வடிவமைப்பையும் விளங்கிக் கொள்ளும் திறனையும் கோட்பாடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான திறன்களையும் நுட்பமுறைப் பயன்பாட்டையும் அளவிடுதல்.
2. இரேகையைப் பயன்படுத்தி பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்தரிக்கும் திறனையும் அளவிடுதல்.
3. வர்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நுட்பமுறையையும் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் முறையில் வர்ணத்தை பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல்.

IIம் பத்திரத்தின் பொருட்டு பரீட்சார்த்தி ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைந்திருப்பர். இதில் பொருட்கூட்டத்தை யதார்த்தத் தன்மையில் வரைந்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்தப்பட்டிருப்பதையே எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பொருட்டு புள்ளிகளை வழங்கும் பொழுது உரிய நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொரு நியதிகளின் கீழ் பரீட்சார்த்தி எவ்வளவு தூரத்தை அண்மித்துள்ளார் என்பதை பிழையின்றி தீர்மானித்து புள்ளி வழங்குதல் வேண்டும். இங்கு தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது மதிப்பீடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் பரீட்சார்த்தி வெளிப்படுத்தியுள்ள திறன்களை விளங்கிக் கொண்டு அதன் அடிப்படையில் மதீப்பீட்டை செய்தல் வேண்டும்.

புள்ளி வழங்கும் நியதிகள்

1. பொருட் கூட்டத்தை கடதாசிப் பரப்பில் கருத்துடன் ஒழுங்கமைத்துள்ள திறன்
   (20 புள்ளிகள்)
2. பொருட்களின் பிரமாணப் பண்பையும் அமைப்பையும் இயல்பையும் வெளிப்படுத்தும் திறன்.
   (20 புள்ளிகள்)
3. கோட்பாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் திறன்.
   (தூரதரிசனம், முப்பரிமாணம், கண்மட்டம்)
   (20 புள்ளிகள்)
4. வர்ணப் பயன்பாடும், இயல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டும் திறன்.
   (20 புள்ளிகள்)
5. சித்திரத்தின் பூரணப்பாடு
   (20 புள்ளிகள்)

II ம் பத்திரத்திற்கு கிடைக்கும் முழுப்புள்ளி - 100 புள்ளிகள்

பத்திரம் III

"அ" கருத்து வெளிப்பாட்டு சித்திரம்

நோக்கம்:-

இயற்கையில் காணக் கிடைக்கின்ற இயற்கையானதும் செயற்கையானதுமான சூழலையும் பொருட்களின் தன்மையினையும் அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுள்ள அனுபவங்களை ஆக்கச் சிறப்புடன் வெளிப்படுத்தும் திறனையும் இரசனை வளர்ச்சியும் மதிப்பிடுதல்.

பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ள தலைப்பை சித்திரிக்கும் பொழுது பல்வேறு மட்டங்களில் திறன்களை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம்.

இரேகையை கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த கூடிய மட்டத்தில் வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைப் போன்று மனித வடிவங்களை கையாளும் போது அது போன்ற வேறுபாட்டை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

வர்ணத்தை பயன்படுத்தும் பொழுது பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்தி உச்ச மட்ட திறன் வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறை திறன் வளர்ச்சி பெறாத பரீட்சார்த்திகளும் வெளிப்படுத்திருக்கும் செயன்முறைத் திறன்களின் மட்டத்தை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

புள்ளி வழங்கும் நியதிகள்

1. தெரிவு செய்த தலைப்பை சித்திரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நிகழ்வினையும் சூழலையும் வெளிப்படுத்தியிருக்கும் தன்மை.
(20 புள்ளிகள்)
2. மனிதர் பிராணிகளின் உருவங்களுடன் சகல வடிவமைப்புக்களையும் பரப்பில் ஒழுங்கிணைத்துள்ள தன்மை.
(20 புள்ளிகள்)
3. கோட்பாட்டுப் பயன்பாடு தொடர்பான விளக்கம்.
(20 புள்ளிகள்)
4. வர்ணப் பயன்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும் திறன்.
(20 புள்ளிகள்)
5. பூரணப்பாடு
(20 புள்ளிகள்)

(முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்)

## பத்திரம் III (ஆ)

அலங்காரமும் அலங்கரிப்பும் ஆக்கமும்

நோக்கம்:-

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிட்டலும் அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

பத்திரம் III க்கு விடையளிக்கும் பொழுது

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதியை தெரிவு செய்கின்றனர். அவர்களிடையே அதிகமானோர் கோட்பாட்டு அறிவுடன் புதிய முறையில் அலங்காரத்தை நிர்மானிப்பதுடன் கோட்பாடு அறிவு இல்லாது அலங்காரத்தை நிர்மானிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிப்படுகின்ற அவர்களுடைய அனுபவத் திறன்கள் பலவாகும். நியதிகளின் மூலம் அவர்கள் வெளிக்காட்டியுள்ள திறன்களின் அளவை விளங்கிக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

புள்ளி வழங்கும் நியதிகள்

1. தலைப்பிற்கு பொருத்தமாக நிர்மானத்தை ஏற்ற வகையில் புதிய முறையில் திட்டமிட்டு கொள்ளும் முறை.
   (20 புள்ளிகள்)
2. நுகர்வோர் தேவைக்கு பொருத்தமாகவும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் அமைத்தல்.
   (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன்.
   (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதல் பயன்படுத்திக் கொள்ளும் திறன்
   (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு அழகும் ஆக்கத்திறன் பூரணப்பாடும்
   (20 புள்ளிகள்)

முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்

## பத்திரம் III (இ) கிரபிக் சித்திர நிர்மானிப்பு

நோக்கம்:-

வியாபார தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிடலும், அலங்கரித்தல் தொடர்பாகவும் பரிசார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

புள்ளி வழங்கும் நியதிகள்

1. தலைப்பிற்கு பொருத்தமான நிருமானச் செயலுக்கும் உரிய வகையில் புதிய முறையில் திட்டமிட்டுக் கொள்ளும் திறன்.
   (20 புள்ளிகள்)
2. வியாபாரத்திற்கும் தொடர்பாடல் தேவைகளுக்கும் ஏற்ற வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமாகவும் அமைதல்.
   (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன்.
   (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதலும் பயன்படுத்தி கொள்ளும் திறன்.
   (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு, அழகு, நிருமானத்திறனும் பூரணப்பாடும்
   (20 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 100 புள்ளிகள்)

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................................  ✓  △ 4/5

..........................................................................................

..........................................................................................

(ii) ..........................................................................................  ✓  △ 3/5

..........................................................................................

..........................................................................................

(iii) ..........................................................................................  ✓  △ 3/5

..........................................................................................

..........................................................................................

(03)  (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்களை தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

චිත්‍ර කලාව I
**சித்திரக்கலை I**
Art I

**51 T I**

08.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

சுட்டெண் : ...............................

- ✻ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

  **பகுதி I**
  - **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
  - ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

  **பகுதி II**
  - மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
  - **ஒவ்வோர்** உப பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதம் தெரிவுசெய்து, **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.
- ✻ பகுதி **I** பகுதி **II** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| **பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்** | |
|---|---|
| **வினாத்தாள் I** | |
| **பகுதி** | **புள்ளி** |
| I | |
| II | |
| **மொத்தம்** | |
| **1ஆவது பரீட்சகர்** | **2ஆவது பரீட்சகர்** |
| | |


## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையை **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


A


B


C


D


E

**1.** **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள காவற்கல்லானது,
(1) அனுராதபுரக் கலைஞரின் ஆக்கபூர்வத் தன்மையை எடுத்துக்காட்டும் பெறுமதி வாய்ந்த படைப்பாகும்.
(2) செதுக்கல் கலையின் பல்வகைமையை எண்ணக்கருரீதியாக எடுத்துக்காட்டும் ஆக்கமாகும்.
(3) நாகராஜரையும் ஏனைய சில குறியீடுகளையும் கொண்டமைந்த ஒரு படைப்பாகும்.
(4) காவற்கல் பற்றிய எண்ணக்கருவை வெளிக்காட்டும் அனுராதபுரகால மிகச் சிறந்த காவற்கல் ஆகும்.
(5) வரையறுக்கப்பட்ட தளத்தில் பல்வேறு விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பலகைச் செதுக்கலாகும். (.........)


**2.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மரச் சட்டகச் செதுக்கலானது,
(1) இரண்டு மனித உருவங்களைச் சிறப்பாக ஒருங்கிணைத்து ஆக்கப்பட்டதொரு படைப்பாகும்.
(2) மல்யுத்த வீரர்களை எடுத்துக்காட்டும் பெறுமதிமிக்கதொரு செதுக்கலாகும்.
(3) பனாவிட்டிய அம்பலத்தில் காணக்கிடைக்கும் மல்யுத்த வீரர்களின் வெளிப்பாட்டுச் செதுக்கலாகும்.
(4) வாழ்க்கை நிகழ்வுகளை வெளிப்படுத்தும் எம்பக்க தேவாலயச் செதுக்கலாகும்.
(5) மல்யுத்த வீரர்கள் ஆக்கபூர்வமாகச் செதுக்கப்பட்டுள்ள எம்பக்க தேவாலயப் படைப்பாகும். (.........)

**3.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள படைப்பானது,
(1) தூபியுடன் தொடர்புடையதாகக் காணத்தக்க செதுக்கல்களைக் கொண்டதோர் ஆக்கமாகும்.
(2) அமராவதி பண்புகளை வெளிக்காட்டும் செதுக்கல்களைக் கொண்ட வாகல்கட நிர்மாணிப்பாகும்.
(3) தூபியொன்றின் நான்கு திசைகளையும் காட்டுவதற்காகச் செய்யப்பட்டதொரு நிர்மாணிப்பாகும்.
(4) நிறைகுடத்திலிருந்து வெளிப்படும் கல்பலதா மலரைக் கொண்டதொரு தூணாகும்.
(5) தூபியின் புஸ்ப பீடத்துடன் தொடர்புடையதொரு செதுக்கலாகும். (.........)


4. D எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வட்டவடிவக் கற்பலகையானது,
   (1) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்திரிக்கும் பாருத் செதுக்கலாகும்.
   (2) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்திரிக்கும் அமராவதி கலைஞரின் ஆக்கமாகும்.
   (3) மதம்பிடித்த யானை பற்றிய செய்தியொன்றைச் சித்திரிக்கும் செதுக்கலாகும்.
   (4) அமராவதி தூபிகளிடையே காணப்படும் பலகைச் செதுக்கல்களில் ஒன்றாகும்.
   (5) சாஞ்சி தூபியின் தூண் செதுக்கல்களில் பெறுமதிமிக்கதொன்றாகும். (.........)

5. E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற முத்திரையின் மூலம் கருதப்படுவது,
   (1) விவசாயிகளான சிந்துவெளி மக்கள், எருதினை மதிப்புக்குரியதாகக் கருதியமையாகும்.
   (2) மிருகங்களுள் எருது புனிதமானதாகக் கருதப்பட்டமையாகும்.
   (3) ஓர் இனக் குழுவை அடையாளம் காட்டுவதன் பொருட்டு ஆபரணமாக அணிந்தமையாகும்.
   (4) சிந்துவெளி மக்கள் எருதினை வணங்கினர் என்பதற்கானதோர் எடுத்துக்காட்டாகும்.
   (5) எருது முத்திரைகள் வியாபாரப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதனையாகும். (.........)

● 6 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** 1 - 7 வரையில் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியப் பகுதிகளிலிருந்து தெரிவுசெய்க.


1


2


3


4


5


6


7

6. இவற்றுள் மிகப் பழைமையான பௌத்த ஓவியம் எது ?
   (1) 2 (2) 3 (3) 4 (4) 5 (5) 6 (.........)

7. இவற்றுள் குகைக் கோயில்களில் காணத்தக்க ஓவியங்கள் யாவை ?
   (1) 2,3,7 (2) 2,5,7 (3) 3,5,6 (4) 3,5,7 (5) 5,6,7 (.........)


8. இவற்றுள் வெட்டி உருவாக்கப்பட்ட குகைகளில் காணத்தக்க ஓவியம் எது ?
   (1) 2 (2) 3 (3) 4 (4) 5 (5) 7 (.........)

9. இவற்றுள் ஒரே காலப்பகுதியில் வரையப்பட்ட ஓவியங்களாகக் கருதப்படுவன யாவை ?
   (1) 1,3,4 (2) 1,3,5 (3) 2,3,5 (4) 3,4,5 (5) 3,4,6 (.........)


10. இவற்றுள் வெளிப்புறக் கற்பாறைகளின் மீது காணத்தக்க ஓவியங்கள் யாவை ?
   (1) 2,5 (2) 2,6 (3) 3,7 (4) 5,6 (5) 6,7 (.........)


- **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையை **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**11.** **K** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இவ்வோவியத்தினால், சோலியஸ் மென்டிஸ்
(1) விகாரைச் சுவரோவியக் கலையை மாற்றத்திற்குட்படுத்தியுள்ளார்.
(2) புத்தரின் இலங்கைக்கான விஜயம் பற்றியதொரு செய்தியை, சரியான ஒழுங்கமைப்புடன் வெளிப்படுத்துகிறார்.
(3) புத்தபகவான் மகியங்கனைக்கு விஜயம் செய்து பேய்களை அடக்கிய விதத்தை, பாவம் நிறைந்த உருவங்களினால் வெளிப்படுத்துகிறார்.
(4) செயற்றிறனான மனித உருவத்தையும் பல்வேறு நடத்தைக் கோலங்களையும் பற்றிய பரந்ததோர் அறிவைக் கொண்டவராகக் காட்டப்பட்டுள்ளார்.
(5) பேய்களின் அதிக பயத்தையும் புத்தபகவானின் அமைதியையும் மிகப் பக்குவமாக எடுத்துக்காட்டுகிறார். (.........)

**12.** **L** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'நீலச் சேலை அணிந்த பெண்' எனும் பிரதிமை ஓவியத்தை வரைந்த கலைஞர் யார் ?
(1) ரியூடர் ராஜபக்ஷ
(2) ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகர
(3) ஹரி பீரிஸ்
(4) ஜே. டீ. ஏ. பெரேரா
(5) ஜஸ்டின் தரணியகல (.........)

**13.** **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'அணில்கள் நிறைந்த மரம்' என்ற ஓவியம்,
(1) இயற்கையின் அழகைச் சித்திரிக்கும் முகலாய ஓவியமாகும்.
(2) ஜஹாங்கீரின் காலப்பகுதியில் வரையப்பட்ட, அப்துல் ஹசன் என்பவரது ஓவியமாகும்.
(3) இயற்கையின் மகிமையை வரைந்த முகலாய ஓவியரான உஸ்தாத் மன்சூரின் படைப்பாகும்.
(4) சாஜஹானின் காலப்பகுதியில் முகலாயக் கலை நிலையத்தில் உருவான உன்னதமான ஓவியமாகும்.
(5) அரச வம்சத்தாரின் சம்பவச் சித்திரிப்பிலிருந்து மாறுபட்ட ஒரு முகலாய ஓவியமாகும். (.........)

**14.** **N** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'மூன்று பெண்கள்' என்ற ஓவியமானது,
(1) பெண்களைப் பற்றியதாக வரையப்பட்ட கவிதைப் பாங்கான கட்புல வெளிப்பாடாகும்.
(2) பெண்கள் மூவரின் உருவங்கள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்ட அலங்காரமான படைப்பாகும்.
(3) யதார்த்தமும் கற்பனையும் ஒன்றிணைக்கப்பட்ட ஜெமினிறோயின் படைப்பாகும்.
(4) சமய வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் மூவர் காட்டப்பட்டுள்ள தாகூரின் நிர்மாணிப்பாகும்.
(5) கோடுகளை முன்னிலைப்படுத்தி அலங்கார ஊடகங்கள் மென்போக்குடன் ஒழுங்கமைக்கப்பட்ட ஜெமினிறோயின் ஓவியமாகும். (.........)

**15.** **O** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'நானும் எனது கிராமமும்' எனும் ஓவியமானது,
(1) அதி யதார்த்தவாதக் கலைஞரான மார்க் சாகலின் கற்பனையின் விளைவாகும்.
(2) கற்பனையுலகின் அடிப்படைக் காரணிகளை மனக்கண்ணால் காண்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(3) சல்வடோர் டாலியின் அடிமனதிற் தோன்றும் கற்பனையானதோர் எண்ணமாகும்.
(4) நனவடியில் தோன்றும் எண்ணங்களை ஓவியமாகப் படைத்த போல் க்ளீயின் நிர்மாணிப்பாகும்.
(5) ஜோன் மீரோவினால் யதார்த்தத்தையும் உருத்திரிப்பினையும் ஒன்றிணைத்து படைக்கப்பட்ட ஓவியமாகும். (.........)


● 16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையை F, G, H, I, J எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் சிலைகளிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

16. F எழுத்தினால் குறிப்பிடப்படும் இச்சிலை,
   (1) ஆன்மீகப் பண்புகளைச் சித்திரிக்கும் கல்விகாரையிலுள்ள புத்தர் சிலையாகும்.
   (2) பொலன்னறுவையில் காணப்படும், விசேட பண்புகளைக் கொண்ட புத்தர் சிலையாகும்.
   (3) கல்விகாரைச் சிலைகளில் காணத்தக்க பண்புகளை எடுத்துக்காட்டும் புத்தர் சிலையாகும்.
   (4) அனுராதபுர சமாதி புத்தர் சிலையோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டதாக பொலன்னறுவையில் காணப்படும் புத்தர் சிலையாகும்.
   (5) தலைமுடியும் ஆடையமைப்பும் மிக எளிமையாகச் சித்திரிக்கப்பட்டுள்ள, பொலன்னறுவையில் காணப்படும் புத்தர் சிலையாகும். (.........)

17. G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வெண்கலச் சிலையானது,
   (1) திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலச் சிலையாகும்.
   (2) திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் காணத்தக்கதொரு சிலையாகும்.
   (3) சோழராட்சிக் காலத்துக்குரிய தென்னிந்தியச் சிலையாகும்.
   (4) சிவபெருமானின் மனைவியான பார்வதிதேவியின் சிலையாகும்.
   (5) வானவன் மாதேவியைச் சித்திரிக்கும் இந்து வெண்கலச் சிற்பமாகும். (.........)

18. H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இந்தியச் சிலையானது,
   (1) சாரானாத் குருகுலத்திற்குரியதொரு சிலையாகும்.
   (2) செதுக்கலுடன் கூடிய ஒளிவட்டத்தைக் கொண்ட சிலையாகும்.
   (3) ஆன்மீகப் பண்புகளைச் சித்திரிக்கும் சாரானாத் சிலையாகும்.
   (4) ஆன்மீகப் பண்புகளைச் சிறப்புற வெளிப்படுத்தும் பெறுமதிவாய்ந்ததொரு சிலையாகும்.
   (5) தர்மத்தைப் போதிக்கும் விதத்தைச் சித்திரிக்கும் புத்தர் சிலையாகும். (.........)

19. I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள எகிப்திய சிற்பமானது,
   (1) தெய்வீகப் பண்புகள் உள்ளடக்கப்பட்ட பாரா அரச வம்சத்தைச் சேர்ந்த அரசரொருவரின் சிலையாகும்.
   (2) மரபுரீதியான, யதார்த்த பண்புகளைச் சித்திரிக்கும் சிலையாகும்.
   (3) பழைய இராசதானிக் காலத்திற்குரிய காப்ரே சிலையாகும்.
   (4) பழைய இராசதானிக் காலத்திற்குரிய ஆடைகள், தலைப்பாகை ஆகியவற்றுடன் கூடிய சிலையாகும்.
   (5) தாடி குறிப்பிடப்பட்டுள்ளமையினால் எகிப்திய சிற்பங்களிடையே மிகச் சிறப்பானதொரு சிலையாகும். (.........)

20. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையானது,
   (1) லண்டன் ரேட் கலைக்கூடத்தில் காணக்கூடிய மார்பளவுச் சிலையாகும்.
   (2) வெண்கல ஊடகத்தினால் ஆக்கப்பட்ட, அரசன் ஒருவனின் சிலையாகும்.
   (3) வீரபராக்கிரமம் மிக்க உரோமப் பேரரசர் ஒருவரைச் சித்திரிக்கும் மார்பளவுச் சிலையாகும்.
   (4) இயற்கைப் பரிமாணத்துடன்கூடிய கிரேக்க மார்பளவுச் சிற்பமாகும்.
   (5) ஹெலனிஸ்டிக் யுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வெண்கல மார்பளவுச் சிற்பமாகும். (.........)

● 21 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

21. உற்பத்திப் பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்படும் சுவரொட்டியொன்றில் மிக முக்கியமாக அமைவது,
   (1) வடிவங்களையும் வர்ணங்களையும் குறியீட்டுரீதியாகப் பயன்படுத்துதலாகும்.
   (2) தொனிப்பொருளுக்குப் பொருத்தமான சுருக்கமான வாசகமொன்றைப் பயன்படுத்துதலாகும்.
   (3) நோக்கங்களை எளிமையாகவும் சிக்கலின்றியும் அர்த்தமுள்ள விதத்திலும் விரைவாகவும் வெளிப்படுத்துதல் ஆகும்.
   (4) குறியீட்டுரீதியான உருவங்களை தளத்துக்கும் வெளிக்கும் பொருந்தும் விதத்தில் திட்டமிடுதலாகும்.
   (5) சிறந்த நிறைவைக் கொண்டதாக வர்ணமயமாக நிர்மாணித்தலாகும். (.........)

**22.** ஓவியமொன்றுக்கு வர்ணம் தீட்டும்போது ஓவியரொருவர் அழுத்தம் கொடுப்பது,
(1) மனங்கவர் தன்மைக்காகும்.
(2) தொனிப்பொருளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகும்.
(3) கலைநுட்பப் பயன்பாட்டிற்காகும்.
(4) தனக்கேயுரித்தான பாணிக்காகும்.
(5) பொருள்களை யதார்த்தபூர்வமாகக் காட்டுவதற்காகும். (.........)

**23.** மனப்பதிவுவாதக் கொள்கை கட்டியெழுப்பப்பட்டமைக்கான அடிப்படை எதிர்பார்ப்பாய் அமைந்தது,
(1) இயற்கை பற்றிய யதார்த்த தன்மையை உரிய விதத்தில் வர்ண ஊடகத்தில் வெளிப்படுத்துதல் ஆகும்.
(2) பொருள் பல்வகைமையை அவதானித்து உண்மையை வெளிப்படுத்துதல் ஆகும்.
(3) பொருள்களின் மீது விழும் ஒளி, அதனால் ஏற்படும் மாற்றங்களைக் கற்றலாகும்.
(4) உண்மை உலகில் பொருள்களின் தன்மையை அதே விதமாக வெளிப்படுத்துதலாகும்.
(5) வரையறுக்கப்பட்ட வர்ணங்களைப் பயன்படுத்தி உண்மையான தன்மையை வெளிப்படுத்துதலாகும். (.........)

**24.** '43ஆவது குழு' உருவாக்கத்தின்போது முன்னோடிக் கலைஞர்களின் நோக்கமாக அமைந்தது,
(1) தொன்மையான சாஸ்திராலய ஓவியக் கலையை பிரபல்யமடையச் செய்தல்
(2) சமகால மேற்கத்தைய கலைஞர்களின் கலைநுட்பங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத்துதல்
(3) சுயமாக புத்தாக்கங்களை உருவாக்குதலும் ஓவியக் கலைக்கு புதியதொரு கருத்தை உருவாக்குதலும்
(4) மரபுகளைப் பேணி, கோட்பாடுகளுக்கமைவாக ஓவியங்களை வரைவதற்கான வாய்ப்பேற்படுத்துதல்
(5) உள்நாட்டு ஓவியக் கலையின்பால் புதிய கலைஞர்களை ஊக்குவித்தல் (.........)

**25.** உண்மை உலகமும் கற்பனை உலகமும் ஒன்றிணைந்த தன்மையை மிகப் பரவலாகக் காணக்கிடைப்பது,
(1) அதி யதார்த்த வாதத்திலாகும். (2) கனவடிவ வாதத்திலாகும்.
(3) மனப்பதிவு வாதத்திலாகும். (4) அரூப வாதத்திலாகும்.
(5) பிற்பட்ட மனப்பதிவு வாதத்திலாகும். (.........)

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புக்களின் உருவப்படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**26.** இங்கு காணப்படும் கட்டட நிர்மாணிப்பானது,
(1) தூபாராம வட்டதாகே ஆகும்.
(2) லங்காராம வட்டதாகே ஆகும்.
(3) திரியாய வட்டதாகே ஆகும்.
(4) அம்பஸ்தல வட்டதாகே ஆகும்.
(5) மெதிரிகிரிய வட்டதாகே ஆகும்.




(.........)

**27.** தம்பதெனிய காலப்பகுதிக்குரிய இந்த நிர்மாணிப்பானது,
(1) கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட படிக்கட்டுகளைக் கொண்ட நுழைவாயில் ஆகும்.
(2) யாப்பகூவ இடிபாடுகளுடன் தொடர்புடைய நுழைவாயிலாகும்.
(3) கற்களாலான செதுக்கல்களைக் கொண்ட கதவுச்சட்டகம் ஆகும்.
(4) சோழர்களின் கலைப் பாணிக்கமைய அமைக்கப்பட்ட யாப்பகூவ அரண்மனையின் நுழைவாயில் ஆகும்.
(5) யாப்பகூவ தலதா மாளிகைக்கு முன்னால் அமைந்துள்ள நுழைவாயில் ஆகும்.



(.........)

**28.** பஞ்சபாண்டவ ரதக் கோயில்களுக்குரித்தான இது,
(1) மூன்று அங்கங்களைக் கொண்ட பிரமிட் வடிவக் கோயிலாகும்.
(2) மிகச் சிறிய திரௌபதி அம்மன் கோயிலாகும்.
(3) தனிக்கல்லினால் செதுக்கப்பட்ட சகாதேவ ரதக் கோயிலாகும்.
(4) எளிய வடிவில் அமைந்த வீம ரதக் கோயிலாகும்.
(5) பிரமிட் வடிவக் கூரையமைப்பைக் கொண்ட தர்மராஜ ரதக் கோயிலாகும்.



(.........)


**29.** இங்கு காட்டப்பட்டுள்ள புனித டெனிஸ் தேவாலயமானது,



(1) அரச குடும்பத்தவர்கள் இறந்தபின்னர் அவர்களைப் புதைப்பதற்காகக் கட்டப்பட்டதாகும்.
(2) குவிவான கூரையமைப்புடன்கூடிய தூண்களைக் கொண்டதாகும்.
(3) ஹோரஸ் தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும்.
(4) அரச வம்சத்தினருக்காக அமைக்கப்பட்ட, மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடமாகும்.
(5) கோதிக் கலை நுட்பத்துக்கமைய பாரிஸ் நகரில் பாரியளவினதாக நிர்மாணிக்கப்பட்டதாகும்.

(.........)

**30.** இங்கு காட்டப்பட்டுள்ள நீள்வட்ட வடிவிலான கட்டடமானது,



(1) அரங்கொன்று நடுவில் அமையுமாறு கட்டப்பட்ட மூன்று மாடிக் கட்டடத் தொகுதியாகும்.
(2) மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையிலான சண்டைகளைப் பார்வையிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொழுதுபோக்கு அரங்காகும்.
(3) அரச வம்சத்தினரின் உள்ளக அரங்காகும்.
(4) கூரையின்றி நிர்மாணிக்கப்பட்ட, அரச வம்சத்தினருக்கான வெளியக அரங்காகும்.
(5) சரிவைக் கொண்டதாக வட்ட வடிவில் அமைக்கப்பட்ட படிக்கட்டுகளுடனான அரங்கைக் கொண்ட நீள்வட்ட வடிவ மூன்று மாடிக் கட்டடமாகும்.

(.........)

- **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச்சரியான விடையைத்** தெரிவுசெய்க.

**31.** இலங்கையினதும் ஐரோப்பாவினதும் வரலாற்றுக்கு முற்பட்ட கால குகை ஓவியங்களை ஒப்பிடும்போது ஐரோப்பிய குகை ஓவியங்களின் தனித்துவமாக அமைவது,
(1) இருண்ட குகைகளில் வரையப்பட்டுள்ளமை
(2) அதிக எண்ணிக்கையான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை
(3) அடிப்படைத் தன்மையான வடிவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளமை
(4) யதார்த்த தன்மைக்கு அண்மித்ததாக சித்திரிக்கப்பட்டுள்ளமை
(5) பல்வேறு வகையான உருவங்கள் ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றமை

(.........)

**32.** மறுமலர்ச்சிக் கால கலைஞர்கள் ஓவியம், சிற்பக் கலைகளில் கைதேர்ந்தவர்களாக மிளிர்வது,
(1) பயிற்சிகளுக்கூடாக செய்முறைத்திறன்களை விருத்தி செய்துகொண்டமையின் ஊடாகவாகும்.
(2) கோட்பாடுகளைச் சரியாக வெளிப்படுத்தியமை மூலமாகும்.
(3) மனித உடல் பற்றிச் சிறப்பாகக் கற்றமையின் மூலமாகும்.
(4) கிரேக்க கலையின் செல்வாக்கைப் பெற்றமையாலாகும்.
(5) மனித உருவை யதார்த்தபூர்வமாகவும் வெளிப்பாட்டு ரீதியாகவும் கையாண்டமை மூலமாகும்.

(.........)

**33.** கண்டியக் கால விகாரை ஓவிய மரபு தாழ்நிலப் பிரதேசங்களுக்குப் பரவலடைந்ததில் காணத்தக்க வெளிப்படையான பண்பு,
(1) பின்னணி, நீலம் அல்லது கறுப்பு வர்ணத்தில் அமைந்திருந்தமை
(2) விரிவான தன்மையும் தாவரங்கள், இயற்கைத் தன்மையினதாக சித்திரிக்கப்பட்டமையும்
(3) வாழ்க்கை வரலாற்றுக் கதைகள் அதிகளவில் சித்திரிக்கப்பட்டமை
(4) மனிதவுருக்கள் அளவில் பெரியனவாகக் காணப்பட்டமை
(5) சமூகரீதியான தகவல்கள் அதிகளவில் சித்திரிக்கப்பட்டமை

(.........)


**34.** பாருத் கல் வேலியின் கற்பலகைச் செதுக்கலின் மூலம் அதிகமாகப் புலப்படுத்தப்படுவது,
(1) புத்தரின் வாழ்க்கை சார்ந்த நிகழ்வுகளாகும்.
(2) ஜாதகக் கதைச் சம்பவங்களாகும்.
(3) வரலாற்றுச் சம்பவங்களாகும்.
(4) போதிசத்துவரை விலங்குகளாகக் காட்டும் ஜாதகக் கதைச் செய்திகளாகும்.
(5) மனித உருவங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட நிகழ்வுகளாகும்.

(.........)

**35.** எகிப்திய புதிய ராசதானிக் கால சிற்பங்களின் மூலம் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்படுவது,
(1) மரபுரீதியான பண்புகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(2) மரபுரீதியான அம்சங்களும் யதார்த்தபூர்வமான அம்சங்களும் சம நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(3) இயற்கைப் பண்புகளுக்கு அழுத்தம் கொடுத்து சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(4) மரபுரீதியான அம்சங்களைக் கவனத்திற் கொள்ளாமையாகும்.
(5) பாரா அரசர்களின் வீர பராக்கிரமங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.

(.........)

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



**36.** இவ்வோவியம் காணப்படுவது,
(1) களனி விகாரையிலாகும்.
(2) பொரல்லை கோதமி விகாரையிலாகும்.
(3) பெல்லன்வில விகாரையிலாகும்.
(4) மாளிகாகந்த விகாரையிலாகும்.
(5) சேதவத்த விகாரையிலாகும். (.........)

**37.** இவ்வோவியத்தை வரைந்த கலைஞர்,
(1) வெளிநாட்டுச் செல்வாக்கிற்குட்பட்டு ஓவியங்களை வரைந்த எம். சார்ளிஸ் ஆவார்.
(2) உள்ளூர் பாரம்பரியங்களை முன்னிலைப்படுத்திய சோலியஸ் மெண்டிஸ் ஆவார்.
(3) விகாரை சித்திரக்கலையை புதிய பாதையிற் செலுத்திய ஜோர்ஜ் கீட் ஆவார்.
(4) புதிய பாணியில் ஓவிய மரபைக் கட்டியெழுப்பிய சோமபந்து வித்யாபதி ஆவார்.
(5) ஓவியக் கலைக்குப் பங்களிப்பு நல்கிய மஞ்சுஸ்ரீ ஆவார். (.........)

**38.** இந்த ஓவியத்தின் கருப்பொருளாக அமைவது சித்தார்த்த குமாரனுடன் தொடர்புடைய எந்தச் சந்தர்ப்பமாகும்?
(1) திருமண நிச்சயதார்த்தம்
(2) திருமணக் கொண்டாட்டம்
(3) இவ்வுலக வாழ்வியல்
(4) யசோதரையைச் சந்தித்தல்
(5) யசோதரையின் மாளிகைக்குச் சென்றமை (.........)

**39.** இந்த ஓவியத்தின் மூலம் கலைஞர்,
(1) மனித உருவங்களினதும் ஏனைய பொருள்களினதும் இயற்கைப் பண்புகளை யதார்த்தபூர்வமாகப் பயன்பாட்டிற்கு எடுத்துள்ளார்.
(2) இயற்கையான மனித உருக் கட்டமைப்பை குறித்தவொரு பாணியில் கையாண்டுள்ளார்.
(3) வெளிப்பாட்டு மாதிரியை நாடகக் கலையின் அடிப்படைக் கொள்ளிலைகளுக்கமைய கையாண்டுள்ளார்.
(4) உயிர்ப்பொருள்களின் அசைவுகளை கலைப்பாங்கான பாரம்பரியத்துக்கமைய கையாண்டுள்ளார்.
(5) மனித உருவங்களை சரியான அளவுப் பரிமாணங்களின்படி ஒருங்கிணைத்து வரைந்துள்ளார். (.........)

**40.** இந்த ஓவியம் தொடர்பில் மிகப் பொருத்தமான கூற்று யாது ?
(1) சிறப்பான ஒழுங்கின் அடிப்படையில் வரையப்பட்டுள்ள உருவங்கள், வர்ணப் பயன்பாடு என்பன மட்டற்ற பாவ வெளிப்பாட்டைக் கொண்டதாகும்.
(2) உணர்வு வெளிப்பாட்டுக்காக அதிகளவிலான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(3) ஒழுங்கமைப்பின் மூலம் தொனிப்பொருளுக்கு நியாயமான இடமொன்று வழங்கப்பட்டுள்ளது.
(4) விகாரை ஓவியக் கலைக்கு உகந்த புதியதொரு ஓவியப் பாணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
(5) சமயரீதியானதொரு தொனிப்பொருளுக்குப் பொருத்தமான வர்ணக் கோலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. (.........)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය / பாட இலக்கம்: **51**

විෂයය / பாடம்: **சித்திரம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 3 | 21. | 3 | 31. | 4 |
| 02. | 5 | 12. | 1 | 22. | 2 | 32. | 5 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 3 | 33. | 1 |
| 04. | 2 | 14. | 5 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 1 | 35. | 4 |
| 06. | 5 | 16. | 5 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 4 | 17. | 4 | 27. | 5 | 37. | 4 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 2 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 5 | 39. | 2 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 5 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

## உப பகுதி - அ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

1. இலங்கையில் நிலவிய ஓவியக் கலையானது நவீன காலத்தை அடையும்போது பல்வேறு செல்வாக்குகளினால் போஷிக்கப்பட்டு புதிய வழிமுறைகளினூடாகப் பரவலடைந்தது.

(i) சாஸ்திராலய ஓவியக் கலையில் ஈடுபட்ட பிரதிமைக் கலைஞர்கள் நால்வரைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

- ACGS அமர சேகர
- டேவிட் பேண்டர்
- JDA பெரேரா
- ஹறி பீரிஸ்
- ரியூட்டர் ராஜபக்ஷ

(ii) எச். ஏ. கருணாரத்ன என்ற கலைஞரின் பாவம் நிறைந்த ஆக்கப்படைப்புகள் தொடர்பாகச் சுருக்கமான அறிமுகம் ஒன்றைத் தருக. (06 புள்ளிகள்)

- இவர் தேசிய உள்நாட்டு, வெளிநாட்டு கலைகளைக் கற்றுணர்ந்து தமக்கே உரியதொரு பாணியை வகுத்துக் கொண்ட கலைஞராவார்.
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஓவியத்துறை சார்பில் பல விருதுகளைப் பெற்றுக் கொண்டவர்.
- இவர் தனது உள்ளக்கிடக்கையில் உள்ள ஓவிய உணர்வுகளை புதிய பாணியில் வெளிப்படுத்தியுள்ளார்.
- வர்ணங்கள், வடிவங்களை வேகமான தூரிகை வீச்சின் மூலம் தனித்துவமாக வெளிக்காட்டியுள்ளார்.
- இவரது ஆக்கங்களில் கேத்திர கணித அரூப டிவங்களைக் காணக்கூடியதாக உள்ளது.
- பின்னணியல் பல்வேறு வர்ணக் சேர்க்கைகளைக் கொண்டு மெருகூட்டியுள்ளார்.
- சந்திரரோதயம், வெள்ளை முகில், கங்கையில் விழும் மழை, பூவாசம் போன்ற ஓவியங்கள் இவ்வகை சார்ந்தவையாகும்.

(iii) டேவிட் பேண்டர், ஜோர்ஜ் கீட் ஆகிய கலைஞர்களால் சமய ஓவியக் கலைக்கு வழங்கப்பட்ட பங்களிப்புகள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியானதொரு மதிப்பீட்டை மேற்கொள்க. (10 புள்ளிகள்)

- சிவில் டேவிட் போன்றோர் கண்டி திருத்துவக் கல்லூரியில்,இயேசு நாதருடைய கிறிஸ்தவ கதைகளை ஓவியமாக தீட்டியுள்ளார். இயேசு நாதருடைய வாழ்க்கையில் இடம் பெற்ற சடம்பவங்கள் சில காட்சிகளை வரைந்துள்ளார்.
  உதாரணம் : நல்ல சமாரியன், சீடர்களின் பாதங்களைக் கழுவுதல்.
- சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர்.
- இவரது படைப்புக்களில் கன்வஸ் துணியில் கொழும்பு தேசிய கலராபவனத்தில் வெற்றியுடன் ஜெருசலத்தினுள் நுழைதல் என்ற ஓவியம் காணப்படுகின்றது. இதனூடாக ஆத்மீக பண்புகளையும் சமய உணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் வரைந்துள்ளார்.
- கிறிஸ்தவ மக்களது சமய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.
- இவரது ஓவியங்கள் சுதேச பாணியில் வரையப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

**ஜோர்ஜ் கீற்ட்**

- இவர் இதே காலப்பகுதியில் பௌத்த சமய வரலாற்றுக் கதைகளை கோதமி விகாரையில் நவீன பாணியிலும் மரபு ரீதியாகவும் ஓவியமாக வரைந்துள்ளார். தனக்கேயுரிய பாணியில் பிக்காசோவின் ஓவியப் பாணியையும் பின்பற்றியுள்ளார்.

  உதாரணம் : மாயாதேவியின் கனவு, தேவ ஆராதனை ( தேவர்களை அழைத்தல் ), வில்வித்தை பழகுதல், இல்லற வாழ்வைத் துறந்து செல்லல், சித்தார்த்தரின் பிறப்பு, கேசம் களைதல், உறவு பூணுதல், உலக இன்பங்களை அனுபவித்தல், பிச்சைகாரன், நோயாளி, இறந்த மனிதரைக் காணுதல், மாறனை வெற்றிக் கொள்ளல் போன்ற ஓவியங்களை நவீன பாணியில் வரைந்து பௌத்த மக்களிடையே சமய உணர்வுகளையும் ஆத்மீக விழிப்புணர்வையும் ஏற்படுத்தி ஓவியத்தினூடாக பௌத்த சமய கலைக்கு அரிய தொண்டாற்றியுள்ளார்.

  பல்வேறு வகையான கோடுகள் மூலம் பாவங்களை வெளிப்படுத்தியுள்ளார். இவருடைய தடித்த வர்ணங்கள் தட்டை யான முறையில் தீட்டப்பட்டுள்ளன.

**2.** அனுராதபுரக் காலத்தில் காணப்பட்ட, புத்தர் சிலை நிர்மாணக் கலைஞர்கள் பொலன்னறுவைக் காலத்தை அடையும்போது விசேட பண்புகளைக் கொண்டதான நிர்மாணங்களில் ஈடுபட்டனர்.

(i) அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அமர்ந்த நிலைச் சிலைகள் **இரண்டையும்** நின்ற நிலைச் சிலைகள் **இரண்டையும்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

அமர்ந்த நிலை புத்தர் சிலை - தொழுவில, மகாமேகவன புத்தர் சிலை, பங்குளிய புத்தர் சிலை
நின்ற நிலை புத்தர் சிலை - அவுக்கண, மகா இலுப்பள்ளம், புதுறுவாகல, மாளிகாவில, சஸ்சேறுவ.

(ii) அனுராதபுரக் கால புத்தர் சிலைகளில் காணத்தக்க சிறப்பான ஆக்கப் பண்புகளைச் சுருக்கமாக விமர்சிக்குக. (06 புள்ளிகள்)

- மகா புருச லட்சணங்களைக் கொண்ட தோற்றம்.
- அரைவாசி மூடியக் கண்கள்.
- மூக்கு நுனியைப் பார்த்தவாறு உள்ள கண்கள்
- உதட்டின் புன்னகையின் வெளிப்பாடு
- நீண்ட காதுகள் காணப்படுகின்றமை.
- சுருண்ட (நத்தைச் சுருள்) போன்ற கேசம்
- தலையில் உச்சிக்குடும்பி
- உடலோடு ஒட்டிய ஆடை அமைப்பு
- அதிகமாக கருங்கற்களை ஊடகமாகக் கொண்டுள்ளமை.
- தென்னிந்தியக் கலைப்பாணிகள் பின்பற்றப்பட்டுள்ளன.
- பல்வேறு முத்திரைகள் சிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- பல்வேறு ஆசன அமைப்புக்களும் சிலைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(iii) பொலன்னறுவைக் கல்விகாரையின் சிலைகளில் மகாயானச் செல்வாக்கு இடம்பெற்றுள்ள விதத்தை கல்விகாரையின் முதலாவது சமாதி சிலையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

- உடலை நேராக வைத்து வீராசன முறையில் அமர்ந்திருத்தல்.
- சிறு தட்டையான முக அமைப்பு, ஒடுங்கி நெற்றி, நேரான கூர்மையான மூக்கு
- உடலோடு ஒட்டிய சமாந்தர சோடி ரேகைகளால் ஆக்கப்பட்ட காவி உடை
- அமர்ந்திருக்கும் ஆசனத்தின் முகப்புக்களில் சிறு தூண்களுக்கிடையே வச்சிரக் குறியீடு, சிங்க வடிவம் என்பன அரைபுடைப்பு முறையில் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
- சிலையின் பின்னணியில் இரு மருங்கிலும் அலங்காரத் தூண்களும் அதன் உச்சியில் அரைவட்ட வில்மாட வளைவுகளையும் கொண்ட தோரணைச் செதுக்கல்கள் காணப்படுகின்றமை.
- தோரணச் செதுக்களில் குறிக்கப்பட்டுள் மாட கூடுகள் என்பன மகாஞான செல்வாக்கை எடுத்தியம்புகின்றன.

## உப பகுதி - ஆ

## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**3.** மௌரியர்களின் காலத்தில் ஆரம்பித்த பௌத்த கலையானது பிற்காலத்தில் இந்தியாவின் அனைத்து கலைகளிலும் முக்கியமான செல்வாக்கைச் செலுத்தியது.

(i) மௌரியர்களின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த நினைவுச் சிலைகள் **இரண்டைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

- ஜக்ஷி உருவங்கள்
- ஜக்ஷன் உருவங்கள்
- முண்டப் படிமைகள்
- லௌரியா நந்தர் கார்
- ராம் பூர்வா தூண்கள்
- ரூமின்தாய், சாரணாத்தூபி, நிக்வே தூபி, சாஞ்சி தூபி பிரதேசம், வசார் பாபில், சங்கஸ தூபி, டில்லி தோட்ஜாஸ் தூபி, டில்லி மிராட் தூபி, லௌரியா அரராஜ்தூபி, டில்லி கோல்புவா.

(ii) பாருத் கலைஞர்கள், தூபியைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட கல் வேலிகளை அலங்கரித்த விதத்தைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

- கல் வேலிகளின் அமைப்புக்கள், சட்டகங்களுக்கிடையில் கற்றகட்டில் செதுக்கல்கள் காணப்படுகின்றன. இவை அலங்காரத் தன்மைக் கொண்டவை.
- பிரகாரத்தைச் சுற்றி 80 தூண்கள் இவைகள் தூபி என நம்பப்படுகின்றது.
- தூபியைச்சுற்றி3தூண்கள்செங்குத்தாகவும்3தூண்கள்கிடையாகவும்கல்வேலிஅமைக்கப்பட்டிருத்தல்.
- 1 தூபி 7 அடி 1 அங்குலம் உயரம் கொண்டது
- கல்வேலியின் மேற்பகுதி சுற்றுப்பிரகாரம் என அழைக்கப்படுகின்றது.
- பிரகாரத்தைச் சுற்றிய கல்வேலிகளில் செதுக்கப்பட்டுள்ள கற்றகடுகளில் ஜாதகக் கதைகள் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளன.

(iii) சாஞ்சி தோரண செதுக்கற் கலைஞரின் நிர்மாணிப்புகளுக்கு புத்த பகவானின் வாழ்க்கைச் சம்பவங்களைப் போன்று புத்த ஜாதகக் கதைகளும் உதவியாக அமைந்தன. அச்செதுக்கல்களின் கலைப் பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

- ஜட்டில தமணய, சங்கிச புரத்திற்கு வருகைத்தரல்
- வைசாலியில் புத்தருக்கு குரங்குகள் பூசை செய்தல்.
- கபிலவஸ்துவை தரிசித்தல், மகாமாயாதேவியின் கனவு, மாரா யுத்தம், ஜட்ஜந்த ஜாதகம், மகாகபி ஜாதகம், வெஸந்தர ஜாதகம்
- புத்தருக்குப் பதிலாக இங்கு குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.
  உதாரணம் : வெஸந்தர ஜாதகம், போதிமரம், தர்ம சக்கரம், ஸ்ரீ பாதம், குடை போன்றன.
- உருவங்களுக்குள் உருவங்களை ஒன்றுடன் ஒன்று இணைந்தவாறு செதுக்கப்பட்டுள்ளன.
- முப்பரிமாணத் தன்மையை செதுக்கல்களில் மிகத் துல்லியமாக காட்டப்பட்டுள்ளது.
  உதாரணம் : மரம், செடிகள் இயல்பான வகையில் லயத்துடன் செதுக்கப்பட்டுள்ளமை.
- உருவங்களைச் செதுக்கி அவற்றை நல்ல முறையில் பூரணப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

- யட்டில தமணய செதுக்கலில் புத்தரைக் காட்டுவதற்காக கல்லாசனத்தைக் குறியீடாகக் காட்டியுள்ளமை.

- சித்தார்த்தரைக் காட்டுவதற்காக தர்ம சக்கரத்தை புத்தரானதைக் காட்ட போதி மரத்தையும் குறியீடாகக் கொண்டு காட்டப்பட்டுள்ளமை.

**4.** 16ஆம் நூற்றாண்டில் முழு இந்தியாவிலும் இஸ்லாமியர்களின் ஆட்சி பரவலடைந்ததோடு அதுவரை நிலவிய கலைகள், பரசிய செல்வாக்கிற்கு உட்பட்டு முகலாய கலை மரபுகள், ராஜ்பூட் கலை மரபுகள் என்பன தோன்றின.

(i) முகலாயர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பெறுமதிவாய்ந்த கட்டடக்கலை நிர்மாணிப்புகள் **இரண்டைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

- வாஸ் மகால், குமாயு சமாதி, தாஜ்மகால், செங்கோட்டை, ஜாம் மஸ்ஜித் ( பள்ளிவாசல் ), பர்ளு பள்ளிவாசல், திவானி ஹாஸ், முசாமன் வேர்ஜி

(ii) முகலாய ஓவியங்களுக்குத் தொனிப்பொருளாய் அமைந்த விடயங்களைக் குறிப்பிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

- கி.பி 16 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பாபரினால் நிறுவப்பட்ட மொகலாய ஆட்சியானது பாரசீகத்திலிருந்தே தோற்றம் பெற்றது. இங்கு தோற்றம் பெற்ற ஓவியங்களில் அரச வாழ்க்கைச் சம்பவங்கள், வேட்டைக் காட்சிகள், அரச சுக போக வாழ்க்கைக் காட்சிகள், பல்வேறு மிருக, பறவை, மலர் வடிவங்கள் என்பன ஓவியங்களில் பெரும்பாலும் வரையப்பட்டுள்ளமையைக் காணலாம். இவ்வாறான விடயங்களை ஓவியங்களுக்கு கருப்பொருளாகக் கொண்டு வரைந்தனர்.

(iii) ராஜ்பூட் ஓவியக் கலைஞர்களின் நிர்மாணிப்புகளுக்கு இந்து சமய இலக்கிய நூல்கள் மூலாதாரமாய் அமைந்தன. உருவான கலைப் படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கலைப் பகுப்பாய்வு ஒன்றை மேற்கொள்க. (10 புள்ளிகள்)

- ராமாயணம்
- மகாபாரதம்
- நளவெண்பா
- கீத கோவிந்தம்
- பரமாஸா
- சோர பஞ்சிகா
- ரசிகப்பிரியா போன்ற அடிப்படையாக அமைந்தன.
- கலை, கலாசாரங்களுடன் உருவாக்கப்பட்ட ஓவியம் கிருஸ்ணன், ராதைக் காதல் காட்சிகள் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தமது ஓவியங்களை வரைந்தனர்.
  உதாரணம் : பில்கானாவும், சம்பாவதியும்
- ராதையின் தோற்றம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ராஜ்புட் கலைஞர்கள் தமது ஓவியங்களைப் படைத்தனர்.

- ஓவியங்களில் கலை இலட்சணங்கள், உருவங்கள் என்பன சிறிதாக வரையப்பட்டிருத்தல்.

- ஓவியங்கள் யாவும் ரிதமாகவும் இயல்பாகவும், லயமாகவும் வரையப்பட்டிருத்தல்.

- விசித்திரமான வர்ணப்பாவனைகளில் பொன்னிறப் பாவனை அதிகமாகக் காணப்படல்

- வர்ணப் பாவனையின் போது உருவங்களை வேறுபடுத்திக் காட்டல், சட்டங்கங்களுக்குள் ஓவியங்களை வரைதல் என்பன ராஜ்புத் ஓவியக்கலையின் சிறப்பம்சங்களாகும்.

## உப பகுதி - இ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**5.** மறுமலர்ச்சிக் காலத்தில் நிலவிய பாரம்பரிய ஓவியக் கலையை புதிய வெளிப்பாட்டுப் பாணியை நோக்கிப் பயணிக்கச் செய்வதற்கு ஆய்வுகளில் ஈடுபட்ட பிற்காலக் கலைஞர்களுக்கு இயலுமானதாக இருந்தது.

(i) மைக்கல் ஆஞ்சலோவின் **நான்கு** சிலைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

- டேவிட் வீரன், பியட்டா, மோசஸ், இறக்கும் அடிமை, கலகக்கார அடிமை, புரூக்கஸ்ும் மேரி மாதாவும், இரண்டாவது யூலியஸ் பொப்பாண்டவரின் கல்லறை வீட்டுச் சிலைகள், அருணோதயம், அன்னை மரியாள் என்பன.

(ii) றபாயல் சான்ரியால் வரையப்பட்ட 'அதன்ஸ் பாடசாலை' என்ற ஓவியத்தின் கட்டமைப்பு, கருப்பொருள் என்பன தொடர்பாகச் சுருக்கமான அறிமுகம் ஒன்றைத் தருக. (06 புள்ளிகள்)

- இவ் ஓவியம் ரபாயர் சான்சியோவினால் வரயப்பட்டதாகும் இரண்டாம் யூலியஸ் போப்பாண்டவர் தமது மாளிகையை அலங்கரிக்கும் பொறுப்பை இவரிடம் கையளித்தார்.
- வத்திகான் மாளிகையின் **சென்சாடெலா, சிக்னாசுறா** என்ற கட்டிடத்தின் சுவரில் ரபாயலினால் அரைவட்ட வடிவப் பரப்பளவில் வரையப்பட்டதாகும்.
- பிரஸ்கோ ஓவிய மரபில் வரையப்பட்ட இவ் ஓவியம் இலக்கியம், தத்துவம் , நீதி சாஸ்திரம், போன்றவற்றில் திறமைவாய்ந்த தத்துவ ஞானிகளை அவரவர் சிறப்புக்கு ஏற்ற தத்ரூபமாக வரைந்துள்ளார். அரைவட்டத்தின் மத்தியில் அரிஸ் ரோட்டல், பிளேட்டோவையும் மற்றய தத்துவ ஞானிகளையும் இயல்பாகவும் ஆடைகளில் லயத்துடனும் வரைந்துள்ளார். இவ்வாறு பிரமாண்டமான கட்டிடத் தொகுதியினுள் தத்துவ ஞானிகளை உள்ளடக்கி வரையப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

(iii) மனப்பதிவு வாதம், பிற்பட்ட மனப்பதிவு வாதம், கனவடிவ வாதம் ஆகியவற்றின் கலைப் படைப்புக்களின் அடிப்படைப் பண்புகளை வெவ்வேறாக உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**மனப்பதிவு வாதம்**

- 19 ஆம் நூற்றாண்டில் பரிசில் நகரை தலைநகராகக் கொண்டு வளர்ச்சியடைந்த கலையாகும்.
- கலைக்கூடத்தில் இருந்து வெளியே வந்து யதார்த்தமான ஓவியங்களை வரையத் தொடங்கினர்
- மனப்பதிவு வாதக் கலைஞர்கள் க்ளாட் மொனே, பியரே ஒகஸ்ரே, ரேனோவர்
  உதாரணம் : சூரிய உதயம், நீல அல்லியும், ஜப்பானிய பாலமும், ரோபின் தேவாலயம்.

- ஒளியின் மாற்றம், அசைவு என்பவற்றை முதன்மைப்படுத்தியதாக உள்ளது.

- பிற்பட்ட மனப்பதிவு வாதம்
  ஒளியியற் வாத கலைஞர்களால் உருவாக்கப்பட்ட முறைகளின் ஊடாக மேலும் ஆய்வுகளை செய்து அதனூடாக ஒரு குழுவொன்று தோற்றுவிக்கப்பட்டது. இவர்களின் ஆக்கங்களில் ஆழமான கருத்து வெளிப்பாடு வர்ணச் சக்தி, உணர்வு வெளிப்பாடு என்பன வெளிப்பட்டது.

- ஓவியத்தின் வெளிப்பாட்டின் ஆழம், அதன் உணர்ச்சி என்பவற்றை முதன்மைப்படுத்தியதாக உள்ளது.

- போல் செசன், போல் கொகான், வின்சட்ன் வான்கோ

- **போல் செசானின் ஓவியங்கள்**
  காட்ஸ் விளையாடுவோர் (சீட்டாடுவோர்)
  சிவப்பு கோர்ட் அணிந்த பெண்
  நீராடும் சிறுவன்

- **போல் கொகானின் ஓவியங்கள்**
  தியோப் கடற்கரை
  சொற்பொழிவின் பின்னர்
  சித்திரக் கலைஞரின் வீட்டினுள்ளே
  சுப தினம்

- **வின்சட்ன் வான்கோவின் ஓவியங்கள்**
  சிறைச்சாலை முற்றம்
  உருளைக்கிழங்கு உண்போர்
  சூரியகாந்தி
  நட்சத்திர இரவு போன்ற ஓவியங்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

**கனவடிவ வாதம்**

- கேத்திர கணித வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு உலகிலுள்ள பொருட்களை புதிய கோணத்தில் வரையப்பட்டுள்ளன. இதுவே கனவடிவ வாதம் எனப்பட்டது.

- **ஓவியர்கள்**
  பப்லோ பிக்காசோ
  ஜோஜ் பிராக்

  **பிக்காசோவின் ஓவியங்கள்**
  குவர்னிகா
  அவிக்னோவின் நங்கையர்
  கிட்டார் வாசிக்கும் வயோதிபர்
  அழுகின்ற பெண்

  **ஜோஜ் பிராக்கின் ஓவியங்கள்**
  வீடும் மராங்களும்
  மனிதனும் கிட்டாரும்
  பாரங்களுடன் கூடிய மேசை (அடிகொண்ட மேசை)
  கறுப்பு மீன்
  கண்ணாடி முன் நிற்கும் பெண் போன்ற ஓவியங்கள் அடிப்படையாகக் கொண்டு அமைந்தன.

6. பைசாந்திய நிர்மாணிப்புகளும் கோதிக் நிர்மாணிப்புகளும் கிறிஸ்தவ தேவாலயங்களினூடாக உன்னத நிலையை அடைந்தன.

(i) பைசாந்திய தேவாலயங்கள் **இரண்டைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

- ஹேக்கியா ஷோபியா
  சன் எப்போலினர்
  நுவோ தேவாலயம்
  சென் விட்டல் தேவாலயம்

(ii) கோதிக் மரபிற்குரிய, பிரான்சில் உள்ள நோட்ரேடாம் தேவாலய கட்டட நிர்மாணப் பண்புகள், அலங்கரிப்புகள் என்பன தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

- பிரான்ஸிஸ் கி.பி 12 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் இக்கலை ஆரம்பமானது.
- உயர்ந்த கட்டட அமைப்புக்கள், மிக உயரமான தூண்களும், சுவர்களும்
- ஸ்ரேயின் கண்ணாடி அலங்கரிப்பு வேலைப்பாடுகளுக்கு இவ்வாலயம் பேறு பெற்றது.
- கூரிய சரிவான கூரைகள், வில் வளை வான யன்னல்கள்
- கட்டடம் 3 அமைப்புக்களாக கட்டப்பட்டுக் காணப்படும். இதனை ப்ரை போரியம் என அழைப்பர்.
- வட்ட வடிவமான கண்ணாடி அலங்கரிப்புக்கள் என்பன கட்டடத்துடன் இணைந்ததாக அமைக்கப்பட்டிருப்பதுடன் இதன் அடித்தளம் சிலுவை அமைப்பைக் கொண்டிருக்கும்.

(iii) "ஜஸ்டினியப் பேரரசின் ஆட்சிக் காலம் பைசாந்தியக் கலையின் பொற்காலமாகும்." உதாரணங்களுடன் பகுப்பாய்க. (10 புள்ளிகள்)

- ஜஸ்டியன் எனும் சக்கரவர்த்தி தனது பராக்கிரமத்தையும் கீர்த்தியையும் கம்பீரத்தையும் பிரதிபலித்துக் காட்டும் வகையில் தனது ஆட்சிக் காலத்தில் ஓவிய, கட்டடக் கலைகள் வளர்க்கப்பட்டன.

- வர்ணக் கண்ணாடிகளில் ஓவியங்களை வரைந்து அதனூடாக சூரிய ஒளி தெறிக்கும் பொழுது ஓவியத்தின் தன்மை விம்பங்களுடன் பிரதிபலிக்கும் தன்மையை வெளிப்படுத்தும். இது வர்ணஜாலமாகக் காட்சியளிக்கும்.
  உதாரணம் : சன்விட்டால் தேவாலயம், ஹேசியா, சோபியா தேவாலயம், தியடரோ அரசி, தேவாலயம் செல்லும் அரசி, தியடரோ அரசரும் பரிவாரங்களும் போன்ற ஓவியங்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

- செசரி எனப்படும் அலங்கார வேலைப்பாடுகள் சிறப்பானவை. அதாவது வர்ணக் கண்ணாடித் துண்டுகள், கற்கள், உலோகத் தகடுகள் என்பவற்றை சீமேந்தின் மீது பதித்து அமைக்கப்பட்ட ஓவியங்கள் இவ்வகையைச் சார்ந்தவை.

- இருபரிமாணத் தன்மை கொண்டவையாக கண்ணாடி ஓவியங்கள் காணப்படுகின்றன.

- கண்ணாடி ஓவியங்களில் பக்தி உணர்வை அதிகரிக்கும் முகமாக பொன்னிற ஒளி வட்டங்கள் காட்டப்பட்டுள்ளன.